**SOP.189/2018**

27-10-2021 **ஆம் தேதி அன்று சாட்சி PW**.1 **நவீன்குமார்.பி.ஆர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

28.9.2005 மற்றும் 18.3.2010 ஆகிய தேதிகளில் Pidilite Industries Limited -ன் டி.எம்.ராகவன் பெயரில் உள்ள முறையே 4000+4000= 8000 பங்குகள் குறித்த சான்றிதழ்கள் Ex.P.1 (2 எண்ணிக்கைகள்). 22.9.2014 ஆம் தேதிய ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா நிறுவனத்தின் பங்கு சான்றிதழ் (1000 பங்குகள்) Ex.P.2. 11.10.2008 ஆம் தேதிய ராம்கோ சிமெண்ட் நிறுவனத்தில் டி.எம்.ராகவன் பெயரில் உள்ள 18000 பங்குகள் குறித்த பங்குச் சான்றிதழ் Ex.P.3. (Ex.P.1 முதல் Ex.P.3 வரையான ஆவணங்கள் அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டு 1 ஆம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டது) டி.எம்.ராகவனின் இறப்புச் சான்றிதழின் புகைப்பட நகல் Ex.P.4. கே.வி.விலாஷினியின் இறப்புச் சான்றிதழின் புகைப்பட நகல் Ex.P.5. டி.எம்.ராகவனின் வாரிசு சான்றிதழின் புகைப்பட நகல் Ex.P.6. மனுதாரர்களின் ஆதார் அட்டைகளின் புகைப்பட நகல்கள் முறையே Ex.P.7 முதல் Ex.P.10. 7.3.2018 ஆம் தேதியில் 1 ஆம் மனுதாரர் 4 ஆம் மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் கை நகல் Ex.P.11. 12.3.2018 ஆம் தேதியில் 4 ஆம் எதிர்மனுதாரர் 1 ஆம் மனுதாரருக்கு அனுப்பிய பதில் Ex.P.12. 1.9.1999 ஆம் தேதிய டி.எம்.ராகவன் எழுதி வைத்துள்ள பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் Ex.P.13. (Ex.P.13 ஆவணம் உத்தேசமாக குறியீடு செய்யப்படுகிறது) 12.8.1985 ஆம் தேதியிட்ட பாக சாசனத்தின் சார்பதிவு நகல் Ex.P.14. (Ex.P.14 அசல் ஆவணம் கத்தோலிக் சிரியன் வங்கியில், சங்காநல்லூர், கோயமுத்தூரில் அடமானத்தில் உள்ளதாகவும், எனவே அதன் சார் பதிவு நகல் தாக்கல் செய்யப்படுவதாகவும் சாட்சி கூறுகிறார்)

(எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டும், முன்னிலையில்லை. 1 ஆம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் முன்னிலை, 2 ஆம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் முன்னிலையில்லை. எவ்வித முறையீடும் இல்லை. 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையாகும் வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டும் எனக் கூறுகிறார். 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையாகும் மூத்த வழக்கறிஞர் திரு.ராதாரமணன் இறப்பு நிகழ்விற்கு சென்றிருப்பதால் நீண்ட காலம் அவகாசம் வேண்டுமென அவரது இளம் வழக்கறிஞர் கோரிக்கை செய்கிறார். மனுவின் தன்மை மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம், போதிய வாய்ப்பு முதலியவைகளை கருத்தில் கொண்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய இறுதி வாய்ப்பாக 01.11.2021 ஆம் தேதிக்கு, மனு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. 1.11.2021 ஆம் தேதி மாலை 5 மணிக்கு இம்மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் தரப்பினர்களுக்கு நீதிமன்றம் தின்னமாக திறந்த நீதிமன்றத்தில் அறிவிக்கிறது)

ஒம்/நவீன்குமார்.பி.ஆர்.

ஒம்/ஆர்.சக்திவேல்,<br>
முதன்மை மாவட்ட நீதிபதி,<br>
கோயமுத்தூர்.